**<u>அசல் வழக்கு எண். 43/2019</u>**

14.10.2022

**பெயர் – முத்துச்சாமி (Dw1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் போர்வெல் வண்டி, ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள 18 ஆவணங்கள் குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் சில ஆவணங்கள் குறித்து விவரம் தெரியும் சில ஆவணங்கள் குறித்து ஞாபகம் இல்லை. 03.03.1989 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை நான் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்து அது குறித்து எனது தரப்பு சாட்சியத்திலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டுள்ளேன். அதில் என்ன விவரம் கண்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அது குறித்து என்ன சாட்சி சொல்லியுள்ளேன் என்பது ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. 03.03.1989 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் யார், யாருக்கு இடையில் பதிவு செய்யப்பட்டது அதில் உள்ள விவரங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 03.03.1989 தேதியிட்ட ஆவணம் என்ன காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் என்ன சொத்து விவரங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(2) நான் எனது முதல் விசாரணையில் பத்தி 6 ல் குறிப்பிட்டுள்ள விரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது அல்ல என்றால் அது பி.வா.சா.ஆ.3 ஆவணம் குறித்தது என்பதால் அது குறித்து எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4 ஆவணமான 14.11.1994 ம் தேதியிட்ட ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேன் பி.வா.சா.ஆ.5 ஆவணமான 13.12.1994 தேதிய கிரைய ஆவணம் என்று குறிப்பிட்டுள்ளேன் அது யார், யாருக்கு இடையில் ஏற்படுத்தப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் பத்தி 7 ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் பி.வா.சா.ஆ.4 ஆவணம் குறித்து என்பதால் அது குறித்து எனக்கு தெரியாது.

(3) நான் பவர் பெற்ற சொத்துக்கள் யாருக்கு சொந்தமானது என்றால் வாதியின் தகப்பனார் சின்னச்சாமி கவுண்டருக்கு சொந்தமானது ஆகும். மேற்படி சொத்துக்களின் மூல ஆவணங்களை பார்த்தேனா என்றால் நான் பொது அதிகார பெற்ற போது என்னிடம் சின்னச்சாமி கவுண்டர் காண்பித்தார்கள். மேற்படி பொது அதிகார ஆவணம் பி.வா.சா.ஆ.7 எனக்கு விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே வாங்கினேனா என்றால் நான் விவசாயத்திற்கும், விற்பனை செய்வதற்கும் பொதுவாக வாங்கினேன். மேற்படி சொத்தை பராமரிப்பதற்கு, அடகு வைப்பதற்கோ, கடன் வாங்குவதற்கோ கண்டு பொது அதிகார ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்று தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.7 பொது அதிகார ஆவணம் என்ன காரணத்திற்காக எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் என் மேல் இருந்த நம்பிக்கையில் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தப்பட்டது.

(4) பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் சொத்து குறித்து வில்லங்க விவகாரங்கள் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன் எதுவும் இல்லை. பொது அதிகார ஆவணம் பொதுவாக எதற்காக எழுதி கொடுக்கப்படும் என்றால் கிரைய செலவு குறைவாக இருப்பதற்காக ஏற்படுத்தப்படும், எனக்கு மேற்படி பூமியை விற்பனை செய்து கொடுப்பதற்காக நம்பிக்கையின் அடிப்படையில் என் மீது பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தார். எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்த 2007 ம் வருடம் சின்னச்சாமிக் கவுண்டருக்கு மேற்படி பூமியை விற்கும் எண்ணம் இருந்தது என்றால் சரிதான். அப்போது மேற்படி சின்னச்சாமி கவுண்டருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 60 வயதிற்கு மேல் இருக்கும்.

(5) நான் பெற்ற பொது அதிகார ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால் பொது அதிகார ஆவணம் குறித்த பொதுவான புரிதல் எனக்கு இருக்கும் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணம் எனக்கு எத்தனை ஏக்கருக்கு கொடுக்கப்பட்டது என்றால் 1 ஏக்கர் 70 செண்ட்டுக்கு ஆகும். அதன் காலை எண். 68/1 ஆகும். இதைத் தவிர வேறு என்ன கண்டு எழுதியுள்ளது என்றால் 68/2 நெ.காலையில் உள்ள கிணறு அதில் உள்ள கூட்டு, இறவை பாத்தியம் குறித்தும் பொது அதிகாரம் ஆவணம் கண்டு எழுதப்பட்டுள்ளது. மேற்படி பொது அதிகார ஆவணத்தில்

ஆவண எண். 4101/2008 ல் தட பாத்திய ஆவணம் குறித்து எந்த விவரமும் சொத்து விவரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

(6) எனக்கு பொது அதிகாரம் கொடுத்தற்கு பிறகு 21.04.2008 ம் தேதி மேற்படி சின்னச்சாமி கவுண்டர் முருகேசன் என்பவருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் ஜோடிக்கப்பட்ட பொய் ஆகும். மேற்படி உயில் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அது வா.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக உயில் ஆவணம் தந்தை, மகனுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் என்னை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். நான் பவர் எழுதிக் கொடுத்த தேதியிலேயே சின்னச்சாமி கவுண்டருக்கு நான் பணம் கொடுத்தேனா என்றால் ரூ.40,000/– கொடுத்துள்ளேன். பின்பு 4 நாட்கள் கழித்து முருகேசனிடம் ரூ.50,000/– கொடுத்தேன். நான் பவர் எழுதிக் கொடுத்த தேதியில் சின்னச்சாமிக் கவுண்டருக்கும், அவரது மகனுக்கும் சேர்த்து ரூ.90,000/– கொடுத்துள்ளேன். நான் மேற்படி பணம் ரூ.90,000/– கொடுத்த விவரம் பொது அதிகார ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் எழுதப்பட்டுள்ளது. தொகை எவ்வளவு என்று தெரியாது.

(7) பொது அதிகார ஆவணம் கிரையத்திற்கு வாங்கும் நோக்கத்தில் தான் ஏற்படுத்தப்பட்டதா என்றால் ஆமாம். பொது அதிகார ஆவணத்தில் விலை ரூ.90,000/– என்று பேசி அதனடிப்படையில் தான் அதை குறிப்பிட்டு எழுதப்பட்டதா என்றால் பொது அதிகார ஆவணத்தில் விலையை குறிப்பிட்டு தான் எழுதி ஏற்படுத்தப்பட்டது. பொது அதிகார ஆவணம் அசல் யாரிடம் உள்ளது என்றால் 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்னிடம் இல்லை. பொது அதிகார ஆவணத்தில் சொத்துக்களை நிர்வகித்து வந்து கணக்கு அனைத்தையும் சின்னச்சாமி கவுண்டரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு ஏற்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சின்னச்சாமி கவுண்டரிடம் எழுதி வாங்கிய பொது அதிகார ஆவணத்தில் ரூ.90,000/–த்திற்கு விலை பேசி பெற்றுக்கொண்டதாகவும் அதை நான் யாருக்கு எப்போது வேண்டுமானாலும் விற்பனை செய்வதற்கு அனுமதித்து எழுதப்பட்டுள்ளதா என்றால் அப்படித்தான் எழுதப்பட்டுள்ளது.

(8) பவர் எழுதிக்கொடுத்த தேதியில் அந்த பூமியை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த 1 ஏக்கர் 70 செண்ட் பூமியில் கருப்பராயன் கோவில் உள்ளதா என்றால் சரிதான். சொத்து விவரத்தில் மேற்படி கோவில் உள்ளதை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தில் யார், யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் செல்லமுத்து மற்றும் மயில்சாமி ஆகியோர் கையெழுத்து செய்துள்ளனர். எனக்கும், சின்னச்சாமி கவுண்டருக்கும் இடையில் மேற்படி செல்லமுத்து தான் இடைத்தரகராக இருந்து மேற்படி பூமியை விலைக்கு வாங்கி கொடுத்தார். பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தும் போது சின்னச்சாமி கவுண்டருக்கும் அவரது மகன் முருகேசனுக்கும் பணம் ரூ.90,000/- கொடுத்தற்கு எவ்வித ஆவணமும் ஆதாராமாக இல்லை என்றால் சரிதான்.

(10) இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் சொத்துக்களை நிர்வகித்து கணக்கு வழக்குகளை சின்னச்சாமி கவுண்டருக்கு ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால் அது பொய். அது போன்றதொரு ஒரு பொது அதிகார ஆவணத்தை நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் பொது அதிகார ஆவணம் பெற்றதன் பேரில் யாருக்காவது கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தேனா என்றால் ஏற்படுத்திக்கொடுத்தேன். ஒரு பிரகாஷ் என்பவருக்கு 03.04.2007 ம் தேதி பி.வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் அந்த சொத்து ரூ.90,000/-க்கு விலைபேசி முன் தொகையாக ரூ.30,000/- கொடுத்து ஒரு வருடம் காலக்கெடுவுக்குள் மீதித் தொகை கொடுத்து கிரையம் செய்துகொள்ளும்படி போடப்பட்டுள்ளது என்றால் நான் கையெழுத்து மட்டும் செய்தேன். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.8 கிரைய ஒப்பந்தத்தில் ரூ.30,000/- முன் தொகை பெற்றுக்கொண்டு ஒரு பிரகாசுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய விவரத்தை சின்னச்சாமி கவுண்டரிடம் நான் தெரிவிக்கவில்லை என்றால் அது குறித்து நான் குறிப்பிட்டேன். மேற்படி அட்வான்ஸ் தொகை ரூ.30,000/- த்தை நான் சின்னச்சாமி கவுண்டரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

(11) மேற்படி பிரகாசிடம் ரூ.30,000/– பெற்றுக்கொண்டு ஒரு வருட காலக்கெடுவுக்குள் ரூ.60,000/– செலுத்தி கிரையம் பெற்றுக்கொள்ளுமாறு போடப்பட்ட ஒப்பந்தம் குறித்த விவரங்களை தெரிவித்தேனா என்றால் இல்லை. ஆனால் விற்பனை செய்வதை கூறினேன் அவர் விற்பனை செய்யுமாறு கூறிவிட்டார். நான் பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை நான் எப்போது ரத்து செய்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தினப்டி நான் கிரையம் செய்து கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.8 ஆவணம் கிரைய ஒப்பந்தத்தை நான் ரத்து செய்தேனா என்றால் ரத்து செய்யவில்லை. நான் பி.வா.சா.ஆ.8 கிரைய ஒப்பந்தம் ரத்து செய்ததாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் நான் எழுதிக்கொடுத்ததா என்றால் நான் எழுதிக்கொடுத்தது தான் அது பி.வா.சா.ஆ.9 ஆகும். மேற்படி பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் ஏன் பிரகாசிற்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

(12) மேற்படி ஆவணத்தில் முன் தொகையாக பிரகாசிடம் பெற்ற ரூ.30,000/– திருப்பி கொடுத்ததாக காணப்படவில்லை என்றால் ஆவணத்தில் குறிப்பிடவில்லை ஆனால் நான் பிரகாசிற்கு திருப்பி கொடுத்துவிட்டேன். நான் கிரைய முன் தொகை ரூ.30,000/– பிரகாசிடம் திருப்பி கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். 22.01.2010 ம் தேதியன்று சின்னச்சாமி கவுண்டர் வாதி முருகேசனுக்கு வா.சா.ஆ.5 உயில் எழுதிக்கொடுத்தள்ளார் என்றால் மேற்படி சின்னச்சாமி கவுண்டர் எனக்கு தெரியாமல் மோசடியாக ஏற்படுத்தியதாகும் அதுவும் சின்னச்சாமி கவுண்டர் இறந்ததற்கு பிறகு ஏற்படுத்தியதாகும். மேற்படி உயில் ஆவணங்களில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணங்கள் 2 ம் கணியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(13) எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த பின்னிட்டு மேற்படி சொத்துக்களை விற்பதற்கோ, வேற எவ்வித வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்த விரும்பாமல் சொத்துக்களை தனது மகனான வாதிக்கு உயில் மூலம் உரிமை மாற்றம் செய்துள்ளார் என்றால் அது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. எனக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தை செயல்படுத்த விரும்பாமல் தான் மேற்படி தனது மகனான வாதிக்கு சின்னச்சாமி கவுண்டர் உயில் மூலம் உரிமை மாற்றம் செய்துள்ளார் அந்த விவரம் எனக்கு

நன்கு தெரியும் என்றால் சரியல்ல. மேலும் மேற்படி சின்னச்சாமி கவுண்டர் உயில் எழுதி வைத்தது உண்மையாக இருந்தால் கந்தசாமிக் கவுண்டருக்கு விற்பனை செய்த போது வில்லங்க சான்றிலும், சிட்டாவிலும் எந்த பதிவும் வரவில்லை. பொது அதிகார ஆவணம், உயில் உள்ளிட்ட விவரங்கள் வில்லங்க சான்றிதல் குறிப்பிடப்படாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொது அதிகார ஆவணம் ஒன்றை மோசடியாக சின்னச்சாமி கவுண்டரிடம் நான் எழுதி வாங்கி அதை ரத்து செய்ய பலமுறை என்னை அழைத்தும் நான் வரவில்லை என்றால் அவர் என்னை அழைக்கவில்லை. அழைத்து வரமாட்டேன் என்று சொல்லவில்லை.

(14) இந்த வழக்குச் சொத்தை யாருக்கு, எப்போது எந்த தேதியில் விற்பனை செய்தேன் என்றால் 03.03.2010 ம் தேதி கந்தசாமிக் கவுண்டருக்கு இந்த சொத்தை நான் விற்பனை செய்தேன். இந்த சொத்தை என்ன விலைக்கு விற்பனை செய்தேன் என்றால் ரூ.1,25,000/–க்கு விற்பனை செய்தேன். மேற்படி சொத்தை விற்ற தொகை ரூ.1,25,000/–த்தை சின்னச்சாமிக் கவுண்டரிடம் கொடுக்கவில்லை என்றால் இதில் விற்ற தொகையில் தான் ரூ.60,000/– கொடுத்தேன். நான் பொது அதிகார ஆவணம் எழுதிய தேதியிலேயே ரூ.90,000/– கொடுத்ததாக நான் ஏற்கனவே சொல்லியுள்ளேன் என்றால் அது சரியா தவறா என்றால் நான் கந்தசாமிக் கவுண்டரிடம் ரூ.60,000/– வாங்கி கொண்டு போய் அந்த பணத்தில் தான் ரூ.60,000/– சின்னச்சாமி கவுண்டரிடம் கொடுத்தேன் என்பது தான் சரி ஆகும். பொது அதிகார ஆவணம் எழுதிய தேதியும், கந்தசாமிக்கவுண்டருக்கு விற்பனை செய்த தேதியும் எவ்வளவு கால இடைவெளி என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

(15) மேற்படி கந்தசாமிக் கவுண்டருக்கு விற்பனை செய்த பணம் ரூ.60,000/– சின்னச்சாமி கவுண்டருக்கு கொடுத்தற்கு ரசீது எதுவும் வைத்துள்ளேனா என்றால் இல்லை அதற்கும் ஆதரவு இல்லை. பொது அதிகார ஆவணம் பெற்ற நபராக இருந்து மேற்படி சொத்தை விற்பனை செய்து அதன் கணக்கு வழக்குகளை சின்னச்சாமி கவுண்டருக்கு ஒப்படைத்ததற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதி கந்தசாமிக் கவுண்டருக்கு பி.வா.சா.ஆ.10 கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்த தேதியில் சின்னச்சாமிக்கவுண்டர் உயிரோடு இருந்தாரா ? இல்லையா ? என்றால் நான் அவரைப் போய் பார்க்கவில்லை அதனால் எனக்கு அது குறித்து தெரியாது. நான்

03.03.2010 அன்று பி.வா.சா.ஆ.10 ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்த பிறகு மேற்படி சின்னச்சாமி கவுண்டர் உயிரோடு இருந்தாரா ? இல்லையா ? என்பது குறித்து தெரிந்து கொள்ளவில்லை அவருடன் தொடர்பிலும் இல்லை.

(16) பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள கிரைய ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் சொத்து விவரம் கூடுதலாக உள்ளதா ? குறைவாக உள்ளதா ? போன்ற விவரங்கள் தெரியுமா என்றால் 1 ஏக்கர் 70 செண்ட் என்று மட்டும் தெரியும். மேலும் பத்திரத்தில் உள்ளபடி பொது கிணறு உள்ளதும் தெரியும். நான் கந்தசாமிக் கவுண்டருக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.10 ல் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தின்படி உள்ள படி எழுதிக்கொடுத்தேன். பொது அதிகார ஆவணத்தை விட்டு அதிகப்படியான விவரங்கள் மேற்படி பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அது எனக்கு தெரியாமல் எழுதப்பட்டிருக்கும். நான் கந்தசாமிக் கவுண்டருக்கு 4101/2008 ஆவணத்தின் உள்ள தடபாத்தியங்களை உரிமைகளை கண்டு பி.வா.சா.ஆ.10 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேனா என்றால் தடம் இல்லை அதனால் எழுதிக்கொடுக்கவில்லை. சாட்சி தற்போது மீண்டும் பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் தட பாத்தியத்தை தான் எழுதிக்கொடுத்திருந்தால் அது தான் எழுதிக்கொடுத்த ஆவணம் என்று கூறுகிறார்.

(17) கணியூர் சார்பதிவக எண். 4101/2008 ல் தடபாத்தியம் சம்மந்தமாக யார், யாருக்கு இடையில் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த தட பாத்திய ஆவணத்தில் எந்ததெந்த தடம் வழியாக எந்தெந்த வண்டிகள் செல்லலாம் என்று எழுதப்பட்டுள்ள விவரமும் எனக்கு தெரியாது. எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தில் 4101/2008 தடபாத்தியம் சம்மந்தமாக எந்த உரிமையும் கொடுக்கப்படவில்லை என்றால் எனக்கு காலை எண். 68/2 ல் இருந்து 68/1க்கு செல்லும் மாமூல் வழிதடத்தை தவிர வேறு எந்த வழித்தட உரிமையும் கொடுக்கப்படவில்லை. 03.03.2010 ம் தேதி ஏற்படுத்திய பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் 4101/2008 ஆவணம் சம்மந்தமாக உரிமை கொடுக்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால்

சரிதான். நான் மேற்படி 4101/2008 ஆவணம் சம்மந்தமாக உரிமை உள்ளதாக காட்டி எந்த ஆவணமும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

(18) நான் கந்தசாமிக்கவுண்டருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் சின்னச்சாமிக்கவுண்டர் நாளது தேதி வரை எந்த வித வில்லங்க விவகாரங்கள் ஏற்படுத்தவில்லை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தில் அந்த ஆவணம் சம்மந்தப்பட்ட மூல ஆவணங்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளது என்று கண்டு எழுதப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் நான் ஒப்படைத்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 கிரைய ஆவணத்தில் நான் மூல ஆவணங்கள் அனைத்தும் கந்தசாமிக்கவுண்டரிடம் ஒப்படைத்துவிட்டேன் என்ற விவரம் காணப்படவில்லை என்றால் சரிதான். மூல ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லாமல் அது சின்னச்சாமி கவுண்டரிடம் இருந்ததால் தான் அது குறித்த பி.வா.சா.ஆ.10 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் அது பொய் சின்னச்சாமி கவுண்டர் என்னிடம் ஒப்படைத்துவிட்டார். சின்னச்சாமி கவுண்டர் மூல ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் ஒப்படைத்தற்கான ஆதாரம் எதுவும் என்னிடம் இல்லை என்று சொன்னால் சமர்ப்பிக்கவில்லை.

(19) கந்தசாமிக்கவுண்டர் கிரையம் பெற்ற பின்னிட்டு அந்த சொத்துக்கள் மீது என்னென்ன வில்லங்கங்கள் ஆனது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை தவிர அதிகப்படியான விவரங்களை கொண்டு கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க முடியாது என்ற விவரம் எனக்கு தெரியும். எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணமானது சின்னச்சாமிக்கவுண்டரால் சொத்துக்களை விற்க முடியாததால் நான் விற்பனை செய்து கொடுத்து கணக்கு வழக்குகளை எழுதிக்கொடுக்க வேண்டும் என்ற கோதாவில் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். எனக்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தில் கண்டபடி நான் எந்த விதமான கணக்கு வழக்குகளை சின்னச்சாமி கவுண்டருக்கு ஒப்படைத்ததாக ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 03.03.2010 ம் தேதி கந்தசாமிக்கவுண்டருக்கு சொத்தை விற்பனை செய்ததற்கு பிறகு சின்னச்சாமிக் கவுண்டரை பார்த்து கிரைய தொகை ரூ.1,25,000/- ஒப்படைத்து கணக்கு வழக்ககளை

ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அவருக்கு சேர வேண்டிய தொகை ரூ.60,000/- ஒப்படைத்தேன். அது எந்த தேதியில் ஒப்படைத்தேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ரூ.60,000/- கொடுத்தற்கான ரசீது நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. மேற்படி ரூ.60,000/- எந்த கணக்கில் சின்னச்சாமிக்கவுண்டருக்கு கொடுத்தேன் என்ற விவரத்தை நான் எனது எதிர் உரையிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(20) மேற்படி கந்தசாமிக் கவுண்டருக்கு விற்பனை செய்த பிறகு அவர் யாருக்கு கிரையம் ஒப்பந்தம் செய்தார், விற்பனை செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 03.03.2010 க்கு பின்னிட்டு தாவா சொத்து குறித்து என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.11 முதல் 19 வரை உள்ள ஆவணங்கள் குறித்து விவரங்கள் அனைத்தும் கந்தசாமி, சக்திவேல் மற்றும் பொன்னுச்சாமி ஆகியோருக்கு மட்டும் தான் தெரியும். எனக்கு எதுவும் தெரியாது. பி.வா.சா.ஆ.11 முதல் 18 வரை உண்டான ஆவணங்கள் குறித்தும் நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எனக்கு சின்னச்சாமிக்கவுண்டர் எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தை வைத்து மோசடியாக கந்தசாமிக்கவுண்டருக்கு கிரையம் செய்து கொடுத்ததாக வாதி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

(21) இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது தான் கந்தசாமிக்கவுண்டர் சக்திவேலுக்கும், பொன்னுச்சாமிக்கும் கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பே கிரையம் எழுதிக்கொடுத்தார். எந்த தேதியில் மேற்படி கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. எந்த தேதியில் முருகேசன் என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதி என் மீதும், 2ம் பிரதிவாதி மீதும் கடந்த 20.12.2013 ம் தேதி அன்றே வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கந்தசாமிக் கவுண்டர் 3, 4 பிரதிவாதிகளான சக்திவேலுக்கும், பொன்னுச்சாமிக்கு 03.03.2014 ம் தேதி அன்று கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டு தான்

கந்தசாமிக்கவுண்டர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் என்னிடம் வந்து சக்திவேலும், பொன்னுச்சாமியும் சொன்ன வகையில் தெரியும்.

(22) பி.வா.சா.ஆ.11 முதல் 19 வரை உள்ள ஆவணங்களில் உள்ள விவரங்கள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையிலும், சாட்சியத்திலும் நான் சின்னச்சாமிக்கவுண்டருக்கு ஒரு முகவர் என்ற அடிப்படையில் செயல்பட்டதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சொத்துக்களை பிரதிப்பிரயோஜனத்தின் பேரில் 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தேன் என்று சாட்சியமளித்துள்ளது எனக்கு கட்டுப்படியான விலைக்கு தான் விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். சின்னச்சாமிக் கவுண்டர் எந்த தேதியில் இறந்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது. 03.03.2010 தேதிக்கு முன்பு சின்னச்சாமிக் கவுண்டர் இறந்தாரா ? உயிருடன் இருந்தாரா ? என்றால் 03.03.2010 க்கு பிறகு 03.03.2014 க்கு முன்பு இறந்துவிட்டார். ஆனால் அது எந்த தேதி என்று எனக்கு தெரியாது.

(23) சின்னச்சாமி கவுண்டர் எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்திற்கு விரோதமாக செயல்பட்டு சின்னச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மோசடியாக கந்தசாமிக் கவுண்டருக்கு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டேன் அவ்வாறு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல செல்லும். சின்னச்சாமி கவுண்டர் எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் சரத்துக்களுக்கு எதிராக செயல்பட்டதால் பி.வா.சா.ஆ. 10 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சின்னச்சாமி கவுண்டர் நம்பிக்கையின் பேரில் எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தார் ஆனால் நான் நம்பிக்கைக்கு மாறாக நடந்ததால் அவர் தனது மகனான வாதிக்கு உயில் எழுதிக்கொடுத்த தேதியில் இருந்தே மேற்படி பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(24) நான் உரிமையாளர் என்ற முறையில் பொது அதிகார முகவர் என்ற வகையில் உரிமையாளரான சின்னச்சாமிக்கவுண்டருக்கு உரிய கணக்கு வழக்குகளை கொடுத்த தொகையை சமர்ப்பிக்காத காரணத்தினாலும், உரியைமாளரான சின்னச்சாமிக்கவுண்டருக்கு எவ்வித பிரதிப்பிரயோஜனமும் கொடுக்காத காரணத்தினால் பிரதிப்பிரயோஜனமற்ற கிரையம் என்பதால் நான் கந்த்சாமிக்கவுண்டருக்கு

எழுதிக்கொடுத்த கிரையம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்தி கொடுத்த பி.வா.சா.ஆ.10 ஆவணம் செல்லாத நிலையில் அதன் பின்னிட்டு ஏற்படுத்திய பி.வா.சா.ஆ.12 ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிக்கு உயில்படி பாத்தியம் என்பதால் தாவாப்படி தீர்ப்பப்பு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பம்/–K.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம் (FAC)